1979 நவம்பர் 7]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கீழ்க்கண்ட நல்ல பணிகளைச் செய்யுமாறு மத்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது:

(1) பீடித் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் மருத்துவ வசதி அளித்தல்.

(2) வீட்டு வசதி செய்து கொடுத்தல்.

(3) மனமகிழ் மன்றங்கள் அமைத்துக் கொடுத்தல்.

(4) கல்வி வசதிகளை செய்து கொடுத்தல்.

இவை நான்கும் இருக்கின்றன. எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் இவைகள் சம்பந்தமாக தங்களுக்கு வரக்கூடிய மனுக்களை என்னிடத்தில் கொண்டு வந்து கொடுக்கும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏதோ என்னுடைய வயதிற்கு தக்க, என்னாலான பணிகளை மேற்கொண்டு செய்து முடித்து தருகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கோத்தகிரியில் புதிய பேருந்து நிலையம்.

* **வினா எண் 132—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோத்தகிரியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): (அ) ஆம்.

(ஆ) கோத்தகிரியில் அமைக்கப்படவிருக்கும் பேருந்து நிலையத்திற்கான நிலம் வாங்கும் ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நிலம் வாங்கியபின் தான் ஏனைய விவரங்கள் தீர்மானிக்கப்படும்.

திரு. போ. கோபாலன்: தலைவர் அவர்களே, கோத்தகிரியில் தனியார்களுக்குச் சொந்தமான கட்டிடத்தில் பேருந்து நிலையம் வைத்திருக்கிறார்கள். ஆனால் அரசாங்கத்திலிருந்து தனியாக வைப்பதற்கு அதிகாரிகள் வேண்டுமென்றே கால தாமதம் செய்கிறார்கள் என்றுகூடப் புகார்கள் வருகின்றன. இதற்கு விரைவில் தீர்வு காண உடனடியாக அங்கே பேருந்து நிலையத்தை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, கோத்தகிரி நகர பகுதியில் 31—3—1978 ஆம் தேதி சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கு தற்போது இருக்கிற பேருந்து நிலையத்தை 20 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. மேலும் சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கே சொந்தமாக ஒரு பேருந்து நிலையம் கட்டுவதற்கு இடத்தைத் தேர்ந்தெடுக்கும் பணி நடந்து கொண்டிருக்கிறது. அங்கு விரைவில் பேருந்து நிலையம் அமைக்கப் படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, கோத்தகிரியில் வெகு காலமாகவே பேருந்து நிலையம் இல்லை. அங்கு வரும் பயணிகள் காற்றினாலும், மழையினாலும் தாக்கப்பட்டு, நிற்கக்கூட இடமின்றி, ஒதுங்கக்கூட இடமின்றி அவதிப்படுகிறார்கள் என்று அரசுக்குத் தெரியும். அந்தப் பேருந்து நிலையத்திற்கு வேறு இடம் மாற்றி தரப்படும் என்று வெகு காலமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி டி.டி.சி.யில் கூட விவாதித்திருக்கிறோம்; அங்கு விரைவில் பேருந்து நிலையத்தைக் கட்ட அரசு வேகமாக நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 9-50)

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஏற்கனவே தெரிவித் திருக்கிறேன்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் திருப்பத்தூர் கிளை அலுவலகம்.

*வினா எண் 133—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் தந்தை பெரியார் போக்கு வரத்துக் கழகத்திற்கு கிளை ஆபீசுக்கென சொந்தமாக இடம் வாங்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வாங்க அரசு உத்தேசித்துள்ளது?